
தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

## இதெக்கேல்




## Hiddekel







கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்


மரம் 14 மே 2014 கனி 6



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2012-2014 Posted at Batlagundu Post office on 10 th May 2014

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.



BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com


To

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன் - ரோமர் 1:16

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

கைபிரதிகள் மற்றும் TVOTI புத்தகங்கள்



*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:** *(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. *(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m. *(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m. *(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel. *(NEW DELHI Contact Mobile: 09810896789)*


**THE WORD OF CHRIST**
Monthly Magazine

திி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழ்







**Editor: B.ARJUNAN**

**Associate Editor: S.Reagan**

**Associate Editor: A.Kanagaraj**


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 165

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடையை வசன ஆதாரத்துடன் தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி, அத்துடன் உங்களுக்கு வரும் எங்கள் மாத இதழ் முகவரியில் உள்ள உங்கள் **(Ref.No)** யும் எழுதி அனுப்பவும்.

1. ஒவ்வொரு பிரதான ஆசாரியனும் எவைகளை செலுத்தும்படி நியமிக்கப்பட்டான்?
2. என்னை இரட்சியும், அப்பொழுது இரட்சிக்கப்படுவேன்; தேவரீரே என் துதி என்று சொல்லும் தீர்க்கன் யார்?
3. நாம் எதினாலே பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை எதினாலேயே சபிக்கிறோம்?
4. அவர் சஞ்சலப்படுத்தினாலும் எப்படி இரங்குவார்?
5. நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார், என எழுதும் அப்போஸ்தலன் யார்?
6. இஸ்ரவேலர்கள் கலகவீட்டாரானபோதிலும் ஒருவேளை சிந்தித்து உணருவார்கள் என்று கர்த்தர் எந்த தீர்க்கதரிசியினிடம் சொன்னார்?
7. இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது நியாயமென்று எண்ணுகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
8. எந்த நாலு வாலிபருக்குத் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்?
9. அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்குமுன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்கிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்கிறோமா?
10. சோர ஸ்திரீ பெற்ற பிள்ளைக்கு என்ன பெயரிடும்படியாக தீர்க்கதரிசிக்கு சொல்லப்பட்டது?

## இதெக்கேல் Hiddekel

- மூன்றாம் ஆற்றுக்கு இதெக்கேல் என்று பேர்
- இது அசீரியாவுக்கு கிழக்கே ஓடும் நதி - ஆதி.2:14
- எபிரெய பாஷையில் இது டைகிரீஸ் என்றழைக்கப்பட்டது - ஆதி.2:14
- தானியேலுக்கு இந்த ஆற்றங்கரையில் தரிசனம் காணப்பட்டது - தானி.10:4
- ஏதேனில் துவங்கி ஓடிய நான்கு நதிகளில் இதுவும் ஒன்று



சிறுவர் பகுதி



# நன்றி

**THANKS** *K.Mohan*

வேத பகுதி: லூக்கா 17:12-19

பிரியமான பிள்ளைகளுக்கு இயேசுவின் தூய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதமும் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதம் தேவனுக்கு நன்றி செலுத்தும் காரியத்தைக்குறித்துப் பார்ப்போம். லூக்கா17:12-19 வசனங்களை வாசிக்கும் போது பத்து குஷ்டரோகிகள் சுத்தமானதைக் காண்கிறோம். குஷ்டரோகம் என்ற நோய் மிகவும் அருவருப்பான நோய். இந்த நோய் உள்ளவர்களை மற்றவர்கள் பார்க்கும் போதெல்லாம் அருவருப்பாக நினைப்பார்கள். குஷ்டரோகிகளைக் கண்டாலே பக்கத்தில் கூட வரமாட்டார்கள். இவர்கள் ஊருக்கு புறம்பே தான் இருக்கவேண்டும். தீட்டு தீட்டு என்று சத்தமிடவேண்டும். இப்படிப்பட்ட வியாதியுள்ள மனுஷன் ஆசாரியனுக்கு தன்னைக் காண்பிக்கவேண்டும். சுத்திகரிப்பின் நாட்கள் முடியும்வரை பாளையத்திற்கு புறம்பே இருக்கவேண்டும் என்ற நியதியெல்லாம் இருந்ததாக நாம் பரிசுத்தவேதாகமத்தில் காண்கிறோம்.

இப்படிப்பட்ட குஷ்டரோகம் நிறைந்த பத்துப்பேர் இயேசுவினிடம் வந்து ஐயரே எங்களுக்கு இரங்கும் என்று இயேசுவை வேண்டிக்கொண்டார்கள். நம்முடைய ஆண்டவர் இயேசு அவர்களைப் பார்த்து: நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் என்ன நடந்தது தெரியுமா? அந்த பத்துபேருடைய குஷ்டரோகமும் மாறியது என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா! அர்களுக்கு ஒரே சந்தோஷம். அவர்களில் ஒருவன், தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி, ஆண்டவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான். அவனோ சமாரியனாயிருந்தான். ஆண்டவர் மற்ற ஒன்பதுபேர் எங்கே என்று கேட்டார்.

தேவனை மகிமைப்படுத்துகிறதற்கு, இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பிவரக்காணோம் என்றார். அன்பான பிள்ளைகளே, இந்த அந்நியனைப்போல ஒரு சிலர்தான் தேவனுக்கு நன்றியுள்ள மக்களாக வாழ்கின்றனர். நீங்கள் இந்த அந்நியனைப்போல நன்றியுள்ள பிள்ளைகளாக வாழ்வீர்களா? அப்படி வாழ்வீர்கள் என்றால் கர்த்தர் உங்களை இன்னும் அதிகமாக காத்து வழிநடத்துவார். இந்த விடுமுறை நாட்களை **VBS** உடன் கொண்டாடும்படி நான் உங்களுக்காக ஜெபிக்கின்றேன்.

> **“எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது”**
> **1தெசலோனிக்கேயர் 5:18**




# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
## THE WORD OF CHRIST
**புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்**

மரம் - 14 மே-2014 கனி - 6


ஆசிரியருரை

# துளிர்த்த ஆரோனின் கோல்
## *Budded the Rod of Aaron*



இஸ்ரவேலிலே, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கோராகு தாத்தான் கூட்டத்தார் முறுமுறுத்தார்கள். அவர்களுடைய முறுமுறுப்பை ஒழியப்பண்ணும்பொருட்டு, தேவன், அவர்களுடைய பிதாக்களின் வம்சங்களின்படியே ஒவ்வொரு கோலாகப் பன்னிரெண்டு கோலை வாங்கி அவனவனுடைய கோலில் அவனவனுடைய பேரை எழுதும்படி கட்டளையிட்டு, நான் தெரிந்துகொள்ளும் கோல் துளிர்க்கும் என்றார். அந்தப்படியாக எழுதி லேவியின் கோலின்மேல் ஆரோனுடைய பேரை எழுதினார்கள். பின்பு அந்தக்கோல்களை மோசே, சாட்சியின் கூடாரத்திலே கர்த்தருடைய சமுகத்தில் வைத்தான். "மறுநாள் மோசே சாட்சியின் கூடாரத்துக்குள் பிரவேசித்தபோது, இதோ, லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது; அது துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப் பழங்களைக் கொடுத்தது" (எண்.17:8). என்ன ஆச்சரியம்! ஆரோனின் காய்ந்தகோல் அநேகர் பார்க்கும்வண்ணமாக ஒரு நாள் இரவிலே துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப் பழங்களைக் கொடுத்தது. இதிலிருந்து நாம் என்ன தெரிந்துகொள்கிறோம்? தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாக முறுமுறுத்துக் கொண்டிருந்தவர்களுக்கு முன்பாக தேவன் தாம் தெரிந்துகொண்ட லேவிகோத்திரத் தானாகிய ஆரோனை தெரிந்துகொண்டார். கோராகும், தாத்தானும் அப்படி என்ன முறுமுறுத்தார்கள் என்று நீங்கள் நினைக்கக்கூடும்; "மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி, அவர்களை நோக்கி; எல்லாரும் மிஞ்சிப்போகிறீர்கள்; சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள்; கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே; இப்படியிருக்க, கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள் என்றார்கள்" (எண்.16:3). இன்றைக்குங்கூட சபைகளில் ஊழியக்காரர்களுக்கு விரோதமாக கூட்டங்கூடுகிறர்வர்களைப் காண்கிறோம். அன்பானவர்களே, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மேல் குற்றஞ்சொல்லாதிருங்கள். ஏனெனில் அவர்கள் ஆபிரகாமின் குமாரரும் குமாரத்திகளுமாயிருக்கிறார்கள். அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று தேவன் ஆபிரகாமைக்குறித்துச் சொல்லியிருக்கிறார்; "...இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்" என்று வாசிக்கிறோம் (ரோம.4:17). இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு வாசகரே! ஆரோனின் காய்ந்தகோல் துளிர்விட்டிருக்கும்போது வாழ்க்கையில் நொந்து, வெந்து போன உன் வாழ்க்கையை

ஒளிமயமான வாழ்க்கையாக மாற்ற கர்த்தர் வல்லவராயிருக்கிறார். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? விசுவாசித்தால் தேவனுடைய மகிமையான காரியங்களைப் பார்ப்பீர்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று என்று சொல்ல ஆரம்பித்தார்கள். இன்றைக்கும் வளர்ந்த கிறிஸ்தவர்கள் கூட சிலவேளைகளில் இந்தவிதமாக சொல்வதைக் கேள்விப்படுகிறோம். தேவன் ஒருவரையும் கைவிடுகிற தேவன் அல்ல. அவர் எல்லோரையும் நேசிக்கிறார். அவர் மனிதனை நேசிக்கிறபடியால் அவனுக்கு தேவையான எல்லாவற்றையும் இந்தப்பூமியில் வைத்து வைத்திருக்கிறார். எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று என்று சொன்ன இஸ்ரவேலருக்கு முன்பாக எசேக்கியேல் தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் சில காரியங்களை அவர்களுக்கு உணர்த்திக்கொண்டுவந்தார். ஒரு முறை உலர்ந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்குக்கு அந்த தீர்க்கனைக் கொண்டுபோனார். அவர் அவனை நோக்கி: மனுபுத்திரனே இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்; அதற்கு அவன்; கர்த்தராகிய ஆண்டவரே அதை அறிவீர் என்றான். பின்பு அவர் சொன்னபடி அவன் தீர்க்கதரிசனம் உரைத்தபோது "ஆவி அந்த எலும்புகளுக்குள் பிரவேசிக்க அவர்கள் உயிரடைந்து காலூன்றி மகா பெரிய சேனையாய் நின்றார்கள்" (எசே.37:10). அன்பானவர்களே, நம்முடைய தேவன் உலர்ந்த எலும்புகளுக்கு உயிர்கொடுக்கும் தேவன். அவரை நீங்கள் பற்றிக்கொள்ளும்போது நீங்கள் உயிரடைவீர்கள்.

ஒரு முறை, மரித்து நான்கு நாட்களான லாசருவின் வீட்டிற்கு கர்த்தர் வந்தபோது, மார்த்தாள் ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரித்திருக்கமாட்டான் என்றாள். இயேசு அவளை நோக்கி நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்றார். ஆண்டவர் லாசருவின் கல்லறைக்கு அருகாமையில் சென்று "லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி; இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார்" (யோவா.11:43,44). மரித்தவர்களுடைய உயிர் மூன்று நாள்வரை அங்கேயே இருக்கும் என்ற நம்பிக்கை யூதர்களுக்குள்ளாக இருந்தாக வேதாகம ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் ஒருவேளை ஆண்டவர் நான்காம் நாள் லாசருவின் கல்லறைக்கு போயிருக்கலாம் எனவும் அதினாலே நான்காம் நாளில் அவனை உயிரோடு எழுப்பினார் எனவும் சொல்லுகிறார்கள். அதிலும் குறிப்பாக பாருங்கள், லாசருவே வெளியேவா என்று சொன்னவருக்கு அந்தக்கட்டுகளை அவிழ்த்துவிட முடியாதா என்ன? ஏன் அதைச் செய்யவில்லை, நம்பிக்கையற்ற அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படவேண்டும் என்பதற்காகவே அவர்களையே லாசருவின் மேல் கட்டப்பட்டிருந்த சீலைகளை அவிழ்த்துவிடும்படி சொன்னார். இந்த அற்புதத்தைப் பார்த்த யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள் என காண்கிறோம். இன்றைக்கு உங்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது. என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று கர்த்தர் சொல்லுகிறார். மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட லாசரு அநேக நாள் உயிரோடிருந்தான். ஆண்டவருடைய ஊழியத்தில் பங்குபெற்றான். இன்றைக்கு நீங்கள் மரித்தோரை உயிரோடு எழுப்புகிற கர்த்தர் மீது உங்களுடைய நம்பிக்கையை வைப்பீர்கள் என்றால் கர்த்தர் செய்கிற பெரிய காரியங்களைக் காண்பீர்கள். மேலும், கர்த்தர் சொல்லும்போது; "உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" என்றார் (யோவா.11:26). கர்த்தரை நம்புகிறவர்கள் என்றுமே மரிப்பதில்லை. ஏனென்றால் அவர் ஜீவனுள்ளவர் அவரைப்பின்பற்றுகிறவர்களும்



C. தர்சுப் பட்டணத்தானாகிய சவுலைப் பற்றி கேள். நீ வருவது அவனுக்குத் தெரியும்.

5. இந்த சவுல் என்ன செய்து கொண்டிருந்தான் என்று கர்த்தருக்கு அனனியா நினைவூட்டுகிறார் (9.13-14).

6. கர்த்தர் அனனியாவிடம் சவுல் ஒரு தெரிந்து கொள்ளப்பட்ட கருவி என்று சொன்னார். அதன்பின் இரண்டாந்தரம் போக முடியாதென்று அனனியாசொல்லவில்லை (9:15-16).

ஏ. சவுலிடம் அனனியா சென்று அவன் செய்ய வேண்டியதைச் சொன்னார்.

A. தமஸ்குவுக்குப் போகும்போது சாலையில் சவுல் இரட்சிக்கப்படவில்லை. ஏனெனில் அனனியா பேசும்போது சவுலிடம் இன்னும் பாவமிருந்தது.

1. அவர் இரட்சிக்கப்பட்டிருந்தால் அது அவருக்குத் தெரியாது. ஏனென்றால் அவர் மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருந்தார். அவர் இரட்சிக்கப்படாதவராயிருந்தார். வேதத்தில் சொல்லப்பட்ட எல்லாரிலும் பரிதபிக்கப்படத்தக் கவராயிருப்பார்.

2. அவர் சாலையில் போகும்போது இரட்சிக்கப்பட்டிருந்தால், அது அனனியாவுக்குத் தெரியாது (22:16).

B. சவுல் உடனடியாக ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டியவராயிருந்தார்.

1. இது மூழ்குவது தண்ணீரைத் தெளிப்பதோ, அல்லது ஊற்றுவதோ போதுமானதாயிருந்திருந்தால் அவர் இருந்த இடத்திலேயே அதைச் செய்திருக்கலாம். ஆனால் அவர் எழுந்து வீட்டை விட்டுச் செல்லவேண்டியிருந்தது.

2. எதுவும் சாப்பிடுமுன் இதை அவர் உடனடியாகச் செய்தார் (9:18-19). பாவங்களைக் கழுவுவதில் ஞானஸ்நானத்திற்குத் தொடர்பில்லை என்றால் ஏன் இவ்வளவு அவசரமாக இதைச் செய்யவேண்டும்.


C. வலைச் செய்தியில் ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதைப் பற்றி வியாக்கியானம் பண்ணியிருந்தார். அப்.22:16 பற்றி அவர் விமர்சிக்கையில் பின்வருமாறு சொல்லுகிறார். பவுலின் பாவங்கள் ஞானஸ்நானத்தினால் கழுவப்படவில்லை மாறாக அவர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டதினால் கழுவப்பட்டது என்றார்.

1. ஒரு வகையில் சிந்தித்தால் அவர் சொல்வது சரியாக இருக்கும். கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்வதால் நாம் இரட்சிக்கப்படுகிறோம் (ரோம.10:13). கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்வதென்றால் என்ன?

2. அது விசுவாசமல்ல விசுவாசத்திற்குப்பின் நிகழ்வதே (ரோம.10:14). சவுல் இயேசுவில் விசுவாசம் வைத்திருந்தார். ஆனாலும் அவருடைய பாவங்கள் கழுவப்பட வேண்டியது அவசியமாயிருந்தது. விசுவாசம் மட்டுமே போதுமானதல்ல.

3. சவுல் தன் பாவங்களிலிருந்து வெளிப்படையாக மனந்திரும்பியிருந்தார். ஆனாலும் அவருடைய பாவங்கள் கழுவப்பட வேண்டியதாயிருந்தது.

4. சவுல் ஜெபித்துக்கொண்டிருந்தார். ஆனாலும் அவருடைய பாவங்கள் கழுவப்பட வேண்டியதாயிருந்தது.. மூன்று நாட்கள் அவர் புசியாமலும் குடியாமலும் ஜெபித்துக்கொண்டிருந்தார். என்னத்திற்காக ஜெபித்தார். நமக்குத் தெரியவில்லை. ஆனால் அவர் தன்னைக் தேவனிடம் தான் எவ்வளவு நல்லவனாக இருந்தேன் என்று ஜெபித்தார் என்று சொல்லாமலிருப்பது பாதுகாப்பானது. சந்தேகத்திற்கிடமின்றி அவர் தன்னை மிகப்பெரிய பாவியென்று தேவனிடம் அறிக்கை செய்து கொண்டிருந்தார். பிரசித்திபெற்ற பாவியின் ஜெபம் வேதத்தில் காணப்படவில்லை. ஒரு பெண்மணியிடம் நாம் பேசிக்கொண்டிருக்கும்போது பாவியின் ஜெபத்தை அவர் பலமுறை ஜெபித்திருப்பதாகச் சொன்னார். நான் அவரிடம், அந்த ஜெபம் வேதத்தில் காணப்படவில்லை என்றேன். அவர் சொன்னார் ஏனென்று ஆச்சரியப்படுகிறேன். இது கர்த்தருடைய திட்டத்தில் ஒரு பகுதியாக ஒருபோதும் இருந்ததில்லை. ஞனாஸ்நானத்தில் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதுதான் கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்வது (அப்.2:22;38).




## பாடம் -6 சவுலின் மனமாற்றம் - *Jerry Bates*

**-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**

- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

III. உடனடியாக பவுல், நான் என்ன செய்யவேண்டுமென்றார்.

A. கர்த்தர் அவனை தமஸ்குவுக்குச் சென்று காத்திருக்கும்படி அனுப்பினார்.

1. அவருடனிருந்த அவருடைய நண்பர்கள் அவரை தமஸ்குவுக்கு நடத்தினர் (அப்.9:8).

சவுல் தமஸ்குவுக்கு சென்று தமஸ்குவையே பலிவாங்கலாம் என்று எதிர்பார்த்துச் சென்றார், அதற்குப் பதில் துக்கமுடைய பாவியாக, பார்வையற்ற யாசகனைப்போல நடத்திச் செல்லப்பட்டார்.

A.2. பவுல் பார்வையற்றவராக, புசியாமலும் குடியாமலும் மூன்று நாட்கள் இருந்தார் (9:9).

a. மனந்திரும்புதலுக்கு அடையாளமாக அவர் உபவாசித்திருந்தார் (யோனா 3:7).

b. ஒருவேளை அவர் மனதிலே மிகவும் பாதிக்கப்பட்டபடியால் சாப்பிட மனதில்லாதிருந்திருக்கலாம்.

c. அந்த நாட்களை தேவனை நோக்கி ஜெபிக்க அவர் எடுத்துக் கொண்டார் (9:11).

3. சவுலின் இரட்சிப்பு தேவனுடைய இரட்சிக்கும் வல்லமையைக் காண்பிக்கிறது.

1. முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் சவுலை கிறிஸ்தவத்திற்கு விரும்பத்தகாத ஒரு நபர் என்று நினைத்தார்கள். அனனியா அப்படித்தான் நினைத்தார்.

a. அவர் கிறிஸ்தவத்திற்கு எதிராக தீர்மானமுள்ள பகைவர்.

b. அவர் மிகவும் கட்டுக் கோப்பான மதக் கோட்பாடுடைய மக்களுக்குத் தலைவர்.

c. கிறிஸ்தவர்கள் அவருக்கு மிகவும் பயந்தார்கள்.

2. இருப்பினும் பவுல் மாறவில்லை. இந்த மாற்றம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் வந்தது (ரோம.1:16).

3. ஒருவரை நாம் மனமாற்றத்திற்குத் தகுதியற்றவர் என்று முத்திரையிடுமுன், கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மாற்றும் வல்லமையை குறைத்து மதிப்பிட்டு விடாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

IV. என்ன செய்ய வேண்டுமென்று சவுலிடம் செல்வதற்கு கர்த்தர் அனனியாவை அனுப்புகிறார்.

A. சவுலிடம் செல்வதற்கு அனனியா சற்றும் ஆர்வமில்லாதவராயிருந்தார்.

1.அனனியா தேவபக்தியுள்ளவராயிருந்தார். அவர் ஒரு பிரசங்கி என்பதற்கு எந்த அடையாளமுமில்லை.

2. முதலில் அவர் போக மனமுள்ளவராயிருந்தார். தேவன் அவரை அழைத்தபோது, ஏசாயா சொன்னார், இதோ, நான் இருக்கிறேன் என்னை அனுப்பும் என்றான்.

4. அனனியா ஒரு பேனாவை எடுத்து கர்த்தருடைய ஆலோசனைகளை எழுதுவதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது.

4a. நேர்த்தெரு எனப்பட்ட தெருவுக்குப் போ. நிறுத்தம்.

b. யூதாவின் வீட்டிற்குப் போ- நிறுத்தம்



ஜீவனுள்ளவர்களாக மாற்றப்படுகிறார்கள். நீங்களும் ஜீவனுள்ளவர்களாக மாற்றப்பட உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். உலர்ந்த எலும்புகளை உயிரடையச் செய்கிற தேவன் உங்களையும் உயிரடையச் செய்வார். பழைய பாவங்களுக்குச் செத்து புதிதானவர்களாயிருக்கும்படியாக உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்தை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து, அவர் கொடுக்கும் பாவ மன்னிப்பை ஞானஸ்நானத்தின் மூலம் பெற்றுக்கொண்டு, ஜீவனுள்ளவர்களாக கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுங்கள்.

"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள் ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்கிறார் (யோவா.15:5). தேவனால் ஏற்படுத்தப்பட்ட திராட்சச்செடி கிறிஸ்துவாக இருக்கிறார். நாமெல்லாரும் அவரில் நிலைத்திருக்கிற கொடிகளாயிருக்கிறோம். ஒருவன் அவரிலும் அவர் அவனிலும் நிலைத்திருந்தால்தான் மிகுந்த கனிகளைக் கொடுக்கமுடியும். பெயரளவில் இருந்துகொண்டு ஒட்டவைக்கப்பட்ட கொடிகளைப்போல இருப்போமானால் அவர் நம்மில் இருக்க மாட்டார். அந்த கொடிகளுக்கு ஏற்ற சாரம் கிடைக்காமல் காய்ந்துபோகும். அவரிலிருந்து துளிர்க்கும் கொடிகளாக வளரவேண்டும். அப்பொழுதே நாம் கனிகொடுக்கமுடியும். இன்றைக்கு அநேகர் இந்த விதமான சத்தியங்களை உணராமல். தாங்களாக கனிகொடுக்கும்படி முயற்சிக்கிறார்கள். அவர்களுடைய பிரயாசம் வீணாய்போய்விடும். மேலும் சொல்கிறார்; "ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே ஏறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்" என்றார் (யோவா.15:6). நீங்கள் அவரில் நிலைத்திராவிட்டால் உங்களுடைய நிலைமை எரிந்து போடப்பட்ட அல்லது வெட்டப்பட்ட கிளையைப்போல தள்ளப்பட்டுப் போகும். ஆகையால் அவரில் நிலைத்திருந்து கனிகொடுக்கப்பிரயாசப்படுங்கள்.

"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" என்றார் (யோவா.15:7,8). அநேகருக்கு இயேசுவின் சீஷர்களாக இருக்க விருப்பம். ஆனால் அவருடைய வார்த்தைகள் அவர்களில் நிலைத்திருப்பதற்கு இடம் கொடுப்பதில்லை. அப்படி அவருடைய வார்த்தைகளில் நிலைத்திருக்கவில்லையென்றால் நம்முடைய ஜெபம்கேட்கப்படுவது எப்படி? நாம் முதலாவது அவருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கும்போது அவரும் நமக்குச் செவிகொடுப்பார். என்னில் நிலைத்திருங்கள் அப்பொழுது உங்களில் நிலைத்திருப்பேன் என்கிறார். நிலைத்திருப்பது என்பது ஆண்டவருடைய உபதேசத்தில் நிலைத்திருப்பது. இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள். சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவா.8:31,32). உபதேசத்தில் நிலைத்திராமல் அவருக்கு சீஷராயிருப்பது கூடாதகாரியம். அநேகர் நான் ஆண்டவருடைய பிள்ளை என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவருடைய உபதேசத்தின்படி நடப்பதில்லை. பின்பு எப்படி ஆண்டவருக்கு சீஷராகவும் தேவனுக்குப் பிள்ளைகளாகவும் இருக்கமுடியும்? இச்செய்தியை வாசிக்கும் வாசகரே, நீங்கள் தேவனை அறிந்தவரா, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட சபையில் இருக்கிறீர்களா? ஆண்டவர் இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் முதலாவது அறிந்துகொள்ளுங்கள். அப்பொழுது அவருடைய சீஷர்களாயிருப்பீர்கள். வாரந்தோறும் சபையாக கூடி தேவனை ஆராதிக்கவேண்டும். அந்நாளில் குறிப்பாக இயேசுகிறிஸ்துவினுடைய பாடு மரணத்தை நினைவுகூரவேண்டும். இவர்களே அவருடைய உபதேசத்தின்படி நடப்பவர்கள். நான் சபைக்கும்போவதுமில்லை, அவரை

நினைவு கூருவதுமில்லையென்று ஒருவர் சொல்லிக்கொண்டு ஒரு கிறிஸ்தவராக இருப்பது கூடாதகாரியம். ஒருவருடமாக சபையாக கூடி தேவனை ஆராதனை செய்து வந்தவர்களையே வேதம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கிறது. இது முதலாவது அந்தியோகிய பட்டணத்தில் ஏற்படுத்தப்பட்டது. அது முதல் அவரை பின்பற்றுகிற, அவருடைய உபதேசத்தின்படி நடக்கிற, அனைவரும் கிறிஸ்தவர்கள் அல்லது கிறிஸ்துவின் சீஷர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். நீங்களும் இவ்விதமாக அழைக்கப்பட அவருடைய உபதேசத்தின்படி நடக்க பிரயாசப்படுங்கள். இஸ்ரவேலரைப்பார்த்து கர்த்தர் சொல்லும்போது; "நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டினேன்; நீ எனக்குத் காட்டுத் திராட்சச் செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன?" என்றார் (எரே.2:21). தேவனுடைய எதிர்பார்ப்புக்கு விரோதமான கனிகளை இஸ்ரவேல் மக்கள் கொடுத்தார்கள். அது தேவனுக்கு பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. நீ கிறிஸ்துவில் நிலைத்திருப்பாயானால் அவருக்கு ஏற்ற கனிகளைக் கொடுக்கவேண்டும். அப்படி கொடுக்காத பட்சத்தில் தேவன் அதை அறுத்துப்போடுவார் என்பதை நீ அறியவேண்டும். ஆரோனின் துளிர்த்த கோலைப்போல நீங்கள் கர்த்தரில் துளிர்த்து கனிகொடுக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

**தேவனாலே கூடாதகாரியம் ஒன்று உண்டா?**

நாம் பார்க்கிற எல்லாம் தேவனால் உண்டானவைகளாயிருக்கிறது. நம்முடைய எண்ணத்திற்கு மேலாக அவர் உயர்ந்தவராயிருக்கிறார். அவரால் எல்லாம் கூடும். அவரால் கூடாதது ஒன்றுமில்லை. யோவான்ஸ்நானன் பிரசங்கிக்கும்போது; "மனந்திரும்புதலுக்கு ஏற்றகனிகளைக் கொடுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்.3:8,9). ஆதாமை சிருஷ்டிக்கும்போது மண்ணிலிருந்து அவனை சிருஷ்டித்தார். அதைப்போல இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்கு பிள்ளைகளை உண்டுபண்ண அவர் வல்லவராயிருக்கிறார் என்பதை நாம் அறியவேண்டும். தேவதூதன் மரியாளிடத்தில் அனுப்பப்பட்டு நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்பெறுவாய் அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக என்று சொல்லும்போது; மரியாள் தேவதூதனை நோக்கி; இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். அதற்கு தேவதூதன் "தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான்" (லூக்.1:27). ஆம் அன்பானவர்களே தேவனாலே எல்லாம் கூடும். அவர் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா. அவரில் நிலைத்திருந்து ஆவிக்குரிய கனிகளை கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**<u>நடப்புச் செய்திகள்</u>**

- தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு ஒரே கட்டமாக நடந்து முடிந்தது. வாக்குச்சாவடிகளில் 5 அடுக்கு போலிஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- இந்திய ராணுவத்தின் தலைமை தளபதியாக லெப்டினென்ட் ஜெனரல் தல்பீர் சிங் சுகாகை நியமிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- மலேசியாவில் இருந்து சீனாவுக்கு 239 பயணிகளுடன் மார்ச் 8-ம் தேதி சென்ற விமானம் நடுவழியில் காணாமற்போன சம்பவம் குறித்து சர்வதேச நாடுகளின் விசாரணைக்கு மலேசிய அரசு நேற்று ஒப்புதல் அளித்துள்ளது.



கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக் கொண்டுவந்த அப்பொல்லோ என்பவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (அப்.18:25,26). இந்த பிரிஸ்கில்லாள் தன் கணவன் ஆக்கில்லாவோடு சுவிசேஷ விஷயத்தில் பிரயாசப்பட்டிருப்பது நம்மை உற்சாகப்படுத்தவில்லையா? நமக்காக மரித்து நம்மை பரிசுத்தமாக்கியவருடைய சுவிசேஷ விஷயத்தில் நாமும் பிரயாசமெடுத்துக் கொள்வோம். அப்பொழுது கர்த்தருடைய சபைக்கு ஊழியஞ்செய்கிறவர்களாய் இருப்போம்.

இயேசுகிறிஸ்து இப்பூமியில் மனுஷனாக வாழ்ந்தபோது, பொல்லாத ஆவிகளின் பிடியிலிருந்தும் வியாதிகளின் பிடியிலிருந்தும் நீங்கி குணமான சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகளின் பிடியிலிருந்து நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் (அரண்மனையில் வேலைசெய்தவனின்) மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், **தங்கள் ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியஞ்செய்து** கொண்டுவந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவரோடு இருந்தார்கள். அன்பு சகோதரியே, உங்களால் ஒருவேளை ஊழியர்களுக்கு ஆதரவாகவும், சுவிசேஷ விஷயத்தில் பிரயாசப்படவும் முடியவில்லையென்றால் நீங்கள் சேர்த்துவைக்கும் பொருட்களையும், பணத்தையும், பூச்சியும் துருவும் அழித்துப்போட்டுவிடும். அழிந்துபோகிற உங்கள் பொக்கிஷங்களால், கர்த்தருக்கும் அவருடைய சபைக்கும் ஊழியஞ்செய்யக் கூடாதா? வாயிருந்தும் பேசாத, கண்களிலிருந்தும் காணாத, கால்களிருந்தும் நடவாத தேவனற்ற எத்தனையோ காரியங்களுக்கு கோடி கோடியாக காணிக்கை செலுத்தும் இந்த பூமியில் அண்டசராசரங்களுக்கெல்லாம் ஒரே தேவனாயிருக்கிறவர் வாசஞ்செய்யும் பரலோகத்திற்கு உங்களை கொண்டு செல்லும் ஒரே சபையாகிய கர்த்தருடைய சபைக்கு உங்கள் ஆஸ்திகளால் ஊழியஞ்செய்யுங்கள்.

ஸ்திரீகளாகிய நாம் சபையில் பேசவும், உபதேசம் பண்ணவும் அனுமதிக்கப்படவில்லை, என்ற போதிலும் சபைக்கு ஊழியஞ்செய்யும்படி சபைக்கும், ஊழியர்களுக்கும் ஆதரவாகவும், அவர்களுக்காகப் பிரயாசப்படவும், சுவிசேஷத்திற்காக மிகவும் பிரயாசப்படவும் நம்முடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்யவும் நமக்கு ஏதுக்கள் உண்டு அவகைளைப் பயன்படுத்தி கர்த்தருடைய சபை பலுகிப்பெருக நம்மை அர்ப்பணிப்போம். கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு கிறிஸ்துவையும், அவரால் உண்டாகும் நித்திய ஜீவனையும் பற்றி அறிவிப்போம். கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு அவருடைய சபையில் அங்கமாயிருப்பவர்களாகிய நாம் அவருடைய சபைக்கு ஊழியஞ்செய்ய தீவீரமாய் புறப்படுவோம். கர்த்தர் தாமே நம்மைப் பெலப்படுத்துவாராக! அதற்குரிய ஞானத்தையும் புத்தியையும் தேவன் உங்களுக்கு அருளும்படி நாங்கள் உங்களுக்காக அநுதினமும் ஜெபிக்கின்றோம். கர்த்தர் தாமே உங்களை அவருடைய பணியில் எடுத்துப்பயன்படுத்துவாராக!

முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்'' (எபே.5:27) என வாசிக்கிறோம். இயேசுவானவர் தம்முடைய சபைக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து நம்மை கறைதிரையற்றவர்களாக, பிழையற்றவர்களாக, பரிசுத்தமுள்ளவர்களாக நிலைநிறுத்தவே இவ்வுலகத்திற்குக் கடந்து வந்தார். இந்த நற்செய்தியை கிறிஸ்துவை பெற்றிராதவர்களுக்கு அறிவித்து அவர்களை வரவிருக்கும் ஆபத்திற்கு, நரகாக்கினைக்குத் தப்புவிக்க ஒத்தாசையாக இருப்போம். பவுல் மற்றும் அநேக ஊழியர்களுக்கு பெபேயாள் ஆதரவாயிருந்ததைப் போல கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உபதேசிக்கிற பரிசுத்தவான்களுக்கு உதவியாயிருப்போம்.

மேலும் பவுல் மரியாள் என்ற சகோதரியைக் குறித்து ரோமர்16:6-ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். ''எங்களுக்காக **மிகவும் பிரயாசப்பட்ட** மரியாளை வாழ்த்துங்கள்''. பவுலுக்கும் அவரோடே கூட இருந்த உடன் ஊழியர்களுக்காகவும் மிகவும் பிரயாசப்பட்டிருக்கிறாள் இந்த மரியாள். ஆங்கிலத்தில் Mary bestowed much labour on us என்றெழுதபட்டுள்ளது. அவர்களை அதிகமாகத் தாங்கியிருக்கிறாள் அல்லது கஷ்டப்பட்டு அவர்களுக்காக உழைத்திருக்கிறாள். பாருங்கள், அன்றைய நாளில் ஒரு பெண் தனித்தவளாக கர்த்தருடைய ஊழியத்தில் பிரசங்கியார்களுக்காகப் பிரயாசப்பட்டிருக்கிறாள். இவளைப் போல திரிபேனாள், மற்றும் திரிபோசாள் என்பவர்களும் கர்த்தருக்குள் பிராயசப்பட்டிருக்கிறார்கள் என்று ரோமர்16:12-ல் வாசிக்கிறோம். எனது அன்பு சகோதரியே, நீங்கள் எப்படி? கர்த்தருடைய ஊழியர்களுக்கு சபை வளர்சிக்கென்று உதவியாயிருக்கிறீர்களா? உங்களுக்காக மரித்த கிறிஸ்துஇயேசுவுக்காகவும் அவருடைய சபைக்காகவும் பிரயாசப்படுகிறீர்களா? சற்றே உங்களைக் குறித்து சிந்தித்துப்பார்க்கும்படியாக உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

பவுல், இன்னும் சில ஸ்திரீகளைக் குறித்து பிலிப்பியர்4:2,3 வசனங்களில் குறிப்பிடுகிறார். எயோதியாள், மற்றும் சிந்திகேயாள் இருவரும் கிலேமெந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடுங் கூடச் **சுவிசேஷ விஷயத்தில்** என்னோடே கூட மிகவும் **பிரயாசப்பட்டார்கள். அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது** என்கிறார். சுவிசேஷ விஷயத்திலுங்கூட நாம் மிகவும் பிரயாசப்படவேண்டியவர்களாக இருக்கிறோம். அன்பு சகோதரியே, ஒருவேளை உங்களுடைய கணவன் ஒரு சுவிசேஷகராயிருந்தால், சுவிசேஷ விஷயத்தில் அவர்களோடு கூட நீங்களும் பிரயாசப்பட முடியும். வீட்டிலிருக்கிற வேலைகளைப் பார்க்கவே நமக்கு நேரமில்லை, பின் எப்படி கணவனோடு கூட சுவிசேஷ விஷயத்தில் ஒத்துழைக்க முடியும் என நினைக்கலாம். கிறிஸ்துவுக்குள் பவுலுக்கு உடன்வேலையாட்களாக பிரிஸ்கில்லாள், ஆக்கில்லா என்ற தம்பதியினர் இருந்திருக்கிறார்கள். இவர்கள் நமக்கு நல்ல மாதிரிகளல்லவா! ஒருமுறை இந்தத் தம்பதியினர் கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க்



# வீடு - House

A.Kanakaraj
Associate Editor

கிறிஸ்துவின் வசனம் மாத இதழ் படித்துவரும் வாசகர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் வாழ்த்துக்கள் பல! வீடு என்ற தலைப்பை பார்த்தவுடன் நம் நினைவுக்கு வருவது நான்கு பக்கமும் சுவரும் மேலே கூறை அல்லது ஆர்.சி.சி தண்ணீர் ஒழுகாத சிமெண்ட் ஓடும் தான். கணவன் மனைவி ஒரு குடும்பம் அல்லது அவர்களை ஒரு வீட்டு குடும்பத்தார் என்று அழைக்கிறோம். வீட்டில் சுவற்றில் காற்று வெளிச்சம் கிடைத்திட ஜன்னல் வைத்து பிரதான வாசல் எந்த திசை நோக்கி இருக்கவேண்டும். வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்று நிதானிக்கிறோம். "கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா" சங்கீதம் 127:1. தேவன் நம்முடைய குடும்ப வீட்டைக் கட்டுகிறார். இதை தேவன் செய்கிறார் ஆகையால் தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார் (மத்.19:6).

ஒரு வீடு எப்படி அமைய வேண்டும் என்று திட்டமிட்டு செல்லும் செலவை கணக்கு பார்த்து படம் வரைந்து சமையல் அறை, பெரிய அறை அல்லது வரவேற்பு அறை, படுக்கை அறை போன்றவற்றை எங்கு கட்டவேண்டுமென திட்டமிட்டுப் பார்த்து கட்டுகின்றனர்.

ஒரு மனிதன் பகல் முழுவதும் உழைத்து களைத்து ஒய்பு எடுக்கும் நேரம் தான் இரவு நேரம். பகல் முழுவதும் நம்முடைய இரத்தம் அதிகமாக அழுத்தத்தின் மூலம் இதயத்திலிருந்து நாடி நரம்பு வழியாக தலை முதல் கால் வரை செங்குத்தான நிலையில் அடிக்கடி ஏறுவதும் இறங்குவதுமாக இருப்பதால் இந்த சரீரத்திற்கு ஓய்வு தேவை. சரீரம் தட்டை வாட்டில் படுக்கும்போது தான் இரத்ததிற்கு அழுத்தம் குறைந்து ஓய்வு கிடைக்கிறது.

நம்முடைய வாழ்க்கைக்கு மிக முக்கியமானது வீடு என்ற இருப்பிடம். வீட்டை எளிய தமிழில் இல்லம் என்று அழைக்கிறோம். இந்த பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும் தேவனால் கட்டப்பட்ட கைவேலையில்லாத விடு நித்திய வீடு பரலோகத்தில் நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் இந்தக் கூடாரத்தில் நாம் தவித்து நம்முடைய பரம வாசஸ்தலத்தை தரித்துகொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம் (2கொரி.5:1,2). அங்கே அழியாததும் வாடாததுமான ஜீவ கிரீடம் நமக்காக பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

நாம் தேவனுடைய ஆலயம் என்றும் (1கொரி.3:16), தேவனுடைய சபை என்றும் (1தீமோ.3;15), சரீரமான சபை என்றும் (எபே.1:23), ஆவிக்கேற்ற மாளிகை என்றும் (1பேது.2:5), கிறிஸ்து சபைக்குத் தலைவர் என்றும் (கொலோ.1:18) காண்கிறோம். இயேசுவே வழியாகவும் சத்தியமாகவும் ஜீவனாகவும் இருக்கிறார் (யோவா.14;6). இவ்வழியே சென்று நித்தியமான பரம வாசஸ்தலத்தை அடையும்படியாக முயற்சி எடுங்கள்.

# நரகம் உண்டென நாம் ஏன் நம்புகிறோம்

## *Why We Believe In Hell*

J.C.Choate



நாம் நரகம் உண்டென நம்புகிறபடியால் சிலசமயங்களில் நரக அக்கினி மற்றும் கந்தகத்தைபற்றிய பிரசங்கத்தில் குற்றஞ்சாட்டப்படுகிறோம். நாம் ஜனங்களிடம் அவர்களுடைய பாவங்களுக்காக அவர்கள் அக்கினிக் கடலில் பங்கடையப்போகிறார்கள் என சொல்ல விழைகிறோமென இது குறிப்பிடுகிறது. நாம் நரகம் உண்டென நம்புகிறோம் என்பதும், இது குறித்து வேதம் போதிக்கிறது என்பதும், ஒரு நாளில் துன்மார்க்கர் அங்கு அனுப்பப்படுவார்களென்பதும் உண்மையே. ஆனால் ஒருவரும் இப்பேர்பட்ட கொடூரமான இடத்திற்குச் செல்லுவதை நாம் விரும்பவில்லை. மேலும் ஜனங்கள் நிச்சயமாக நரகாக்கினைக்கென்று தங்களுடைய வழியில் பிடிவாதமாகச் செல்லுகின்றதிலும் நிச்சயமாக நாம் சந்தோஷத்தை காண்பதில்லை.

அநேகமாக நம்முடைய பாடத்தினைத் துவக்குமுன் நரகத்தைப் பற்றி விளக்கமளிக்க நாம் நேரம் எடுத்துக் கொள்ளவேண்டும். நாங்கள் இதுபற்றி என்ன பேசுகிறோமென நீங்கள் ஒருவேளை முழுவதும் புரிந்துகொள்ளாமல் கூட இருக்கலாம். சிலவேளைகளில் நரகம் என்றவார்த்தை வேதாகமத்தில் மரணம் என பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக மத்தேயு16:18-ல் கிறிஸ்து தாம் எவ்வாறு மரிக்கப்போகிறாரென்பது பற்றி பேசுகையில், தம்முடைய சபையைக் கட்டாமலிருக்கும்படி தம்முடைய மரணம் கூட தம்மைக்கட்டுப்படுத்தாது என்றார். வேதவாக்கியம், “பாதாளத்தின் வாசல்கள் அதைமேற்கொள்வதில்லை” அல்லது மரணத்தின் வாசல் அதைத் தடுப்பதில்லை என்கிறது. நரகம், பொதுவாக இது அளவுக்கதிகமான வேதனை நிறைந்த இடமாக, ஒரு அக்கினிக் கடலாக, மேலும் கந்தகமாக, நித்தியதண்டனையாக, துன்மார்க்கர் என்றென்றும் வாழும் இடமாக விவரிக்கப்பட்டுள்ளது. இது கெட்டுப்போன ஆத்துமாக்களுக்கு நித்தியமான வீடாயிருக்கும்.

ஆனால் இப்பேர்பட்ட பயங்கரமான இடத்திற்கு ஒருவன் ஏன் செல்லவேண்டும் அல்லது அன்பு நிறைந்த தேவன், ஒருவனை ஏன் நரகத்திற்கு அனுப்ப வேண்டும்? நரகத்தைப் பற்றி விளக்கிக்கூற இப்படிப்பட்ட வினாக்களுக்கு அர்த்தம் கூறவேண்டியது நமக்கு அவசியமாயிருக்கிறது. உண்மையாகவே நரகம் சாத்தானுக்காகவும் அவனுடைய தூதனுக்காகவும் ஆயத்தமாக்கப்பட்டது. துன்மார்க்கரைக் குறித்து பேசுகையில், நியாயத்தீர்ப்பின் நாளிலே நியாயாதிபதி அவர்களை நோக்கி: “சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே



பெண்கள் பகுதி

# சபைக்கு ஊழியஞ்செய்தல்

## Serving the Church

- Glory Arjunan



சபை என்பது என்ன? இந்த வானத்தையும் பூமியையும் படைத்த ஒரே தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தம் முழுவதையும் சிந்தி சம்பாதித்த ஜனக்கூட்டமே சபை. ஆம், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவமற கழுவப்பட்டு ஒரே சிந்தையோடு கூட தேவனை தொழுது கொண்டு வருகிற அந்த மக்களின் கூட்டம் தான் சபை. அன்பு சகோதரியே, நீங்கள் இந்த ஜனக்கூட்டத்தில் ஒருவராயிருப்பீரென்றால், இந்த முழு சபைக்கும் ஊழியஞ்செய்ய உங்களை அர்ப்பணிப்பீர்களா? இந்த சபையில் உங்களை அங்கமாக்க இயேசு உங்களுக்காக மரித்தாரே! மரித்து உயிரோடிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்றும் “சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறார்” (எபே.5:29). கிறிஸ்துவே தலையாயிருக்கிற இந்தச் சபை பலுகிபெருகி விருத்தியடைய இதற்கு ஊழியஞ்செய்ய உங்களை அன்புடன் வேண்டிவிரும்பிக்கேட்டுக்கொள்கிறேன். கி.பி. முதல் நூற்றாண்டில் சபைக்கு ஆதரவாகவும், சபைக்காகப் பிரயாசப்பட்டவர்களாகவும், சுவிசேஷவிஷயத்தில் பிரயாசப்பட்டவர்களுமான சில ஸ்திரீகள் இருந்திருக்கின்றனர். அப்பேர்பட்ட ஸ்திரீகளை நமக்கு மாதிரியாக நோக்குவோம்.

கெங்கிரேயா ஊரிலிருந்த கிறிஸ்துவின் சபைக்கு பெபேயாள் என்ற சகோதரி ஊழியக்காரியாக இருந்தாள். அவளை பற்றி பவுல் கூறும்போது “......அவள் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள்” (ரோம.16:1,2) என்கிறார். She was a succourer. ஒத்தாசையாக, ஆபத்துக்காலத்தில் உதவுபவளாக, தேவையான பொழுது உதவுபவளாக இருந்திருக்கிறாள் என்று பொருள். அன்பு சகோதரியே, இன்றைய தேவை என்ன? ஆபத்துக்காலத்தில், அதாவது பாவப்பிடியிலும், உலக சிற்றின்பங்களிலும், உலகக்கவலையிலும் சிக்குண்டு கொஞ்சம் கொஞ்சமாக தங்களுடைய சரீரங்களையும், தங்கள் ஆத்துமாக்களையும் அழித்துக்கொண்டு ஆபத்தான சூழ்நிலையில் அல்லற்பட்டுக்கொண்டிருக்கிறவர்களுக்கு உதவி செய்ய வேண்டியதல்லவா உண்மையான தேவையாயிருக்கிறது. ‘A friend in need is a friend indeed’ என்ற ஆங்கிலப் பழமொழியை நாம் நன்கு அறிவோம். ஆபத்தில் உதவுபவனே நண்பன். மனிதநேயம் வேண்டுமென்று வாயலளவில் சொல்லிக்கொண்டு கிரியை செய்யாமல் இருப்போமானால் வஞ்சகர்களாக இருப்போம். இன்று கிறிஸ்துவின் சபை வளர்ச்சியடையாமலிருப்பதற்கு நம்மிலுள்ள கிரியையில்லாத விசுவாசமே காரணம் என்று தான் சொல்லவேண்டும். “கறைதிரை

புறம்பாக்கும்போது, பொதுவாக சமுதாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பிலிருந்து அவன் தாமே புறம்பாக்கப்படுகிறான்.

❐ ஒரு மனிதன் எதையும் செய்ய ஆயத்தமாக இருக்கும் பொழுது, மறுபடியும் சாத்தான் ஒரு மிகப்பெரிய நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் ஒரு மனிதன் தன் சுய- நலனுக்காக ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரையும் தியாகம் பண்ணுகிறபோது என்ன நடக்கிறது? பொய், ஏமாற்று, களவு போன்றவைகள் அம்பலப்படுத்தப்படும்போது, யார் ஒவ்வொன்றையும் இழக்கிறான்? பாலியல் தொற்று வியாதிகள் மூலம், எய்ட்ஸ் வியாதியின் மூலம், கருச்சிதைவினால் உணர்ச்சிமிக்க சரீரத் தழும்புகள் மூலம், யாருடைய சரீரம் அழிந்து போகும்? உதவியற்றவனாக, முதியோனாக குறைபாடுள்ளவனாக, ஒருவன் “மாய்த்துக்கொள்ள”-கொன்றுவிட- ஆயத்தமாயிருந்தால், அவன் உதவியற்றவனாகவும், வயதானவனாகவும், குறைபாடுள்ளவனாகவுமிருக்கும் போது அவனுக்கு என்ன நேரிடும்? ஒருவனுடைய நியாயங்கள் மற்றவர்களுடைய நியாயங்களால் நசுக்கப்படும் பொழுது, அவர்கள் குற்றவாளிகளாக மாறுகின்றனர்.

தேவனுடைய ஞானத்தில், நீண்டகாலத்திற்கு முன்பாக அவர் தம்முடைய வார்த்தையில், “பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்”(ரோம.6:23) என எச்சரித்தார். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவோமானால், அவர் ஏற்படுத்தின இந்தக்கட்டளை பார்ப்பதற்கு ஒரு நியாயமற்ற கொடுங்கோன்மையான ‘கட்டளை’ அல்ல. இது ஒரு உண்மையான கூற்று. பாவம் தவிர்க்க முடியாத விளைவுகளைக் கொண்டுவரும்.

திரும்பச் சென்று உங்களுடைய தீர்மானத்தை மறு ஆய்வு செய்யுங்கள். சாத்தானுடைய தந்திரமான பொய்களை நம்பி உங்களை அழித்துக் கொள்ளாதீர்கள்.

# பொது அறிவு சோதனை

**1. ராஜ்யசபைக்கு தலைமை தாங்குபவர் யார்?**

**அ) ஜனாதிபதி ஆ) துணை ஜனாதிபதி இ) பிரதமர்**

**2. உச்சநீதிமன்ற நீதிபதிகளை நீக்கும் அதிகாரம் படைத்தவர் யார்?**

**அ) குடியரசு தலைவர் ஆ) பிரதமர் இ) ஆளுநர்**

**3. தேசிய நவீன சித்திர கூடம் எங்கு அமைந்துள்ளது?**

**அ) சென்னை ஆ) ஐதராபாத் இ) நியூ டெல்லி**

**4. டெல்லி நகரின் பழைய பெயர் எது?**

**அ) பாடலிபுத்திரம் ஆ) ஆக்ரா இ) இந்திர பிரஸ்தம்**

**5. அக்டோபர் 24-ம் தேதியின் முக்கியத்துவம் எது?**

**அ) ஐ.நா தினம் ஆ) ஆசிரியர் தினம் இ) கொடிதினம்**

விடைகள்:
1. துணை ஜனாதிபதி
2. குடியரசு தலைவர்
3. புது டெல்லி
4. இந்திர பிரஸ்தம்
5. ஐ.நா. தினம்



போங்கள்” (மத்.25:41) என்பார் என்று கிறிஸ்து சொல்லுகிறார். பிசாசு பாவத்திற்கும் அவபக்திக்கும், துன்மார்க்கத்திற்கும் அடையாளமாயிருக்கிறான். அவன் நன்மையும் நீதியுமானவற்றிற்கு மிகவும் எதிராகயிருக்கிறான். அவன் தேவனுடைய விரோதி, அவன் தனக்குக் கூட்டாளியாக தூதுவர்களை உடையவனாயிருக்கிறான். ஆனபடியினால், நரகம் அவர்களுக்கென்று ஆயத்தமாக்கப்பட்டது. அதே சமயம், நரகமானது மனித ஆத்துமாக்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டது என்று இது சுட்டிக்காட்டுகிறது. இருந்தாலும்கூட மனிதன் ஒருபாவியாகயிருக்கிறான், மனிதன் நரகத்தினின்று தப்பித்துக்கொள்ளுவதற்கு தேவன் ஒரு வழியை ஏற்படுத்தியுள்ளார். இதனால் அவன் தேவனையும் அவருடைய இரட்சிப்பையும் புறக்கணித்து அந்த மனிதன் கெட்டுப்போனவனாய் நரகத்திற்கென்று நியமிக்கப்பட்டிருக்கையில் தேவன் அந்த வழியை தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துமூலம் அளிக்கிறார். ஆனாலும் கூட, இது தேவன் அவனை அந்த நரகத்திற்கு அனுப்புகின்ற காரியமல்ல. மனிதன் தம்மைத்தாமே அங்கு அனுப்புகிறான். ஆகவே தன்னைத் தவிர வேறொருவரையும் அவன் குற்றப்படுத்த முடிகிறதில்லை.

பரலோகம் ஆகாயத்தில் இருக்கிறது எனச் சொல்லப்பட்டிருக்கையில் நரகம் பாதாளமாகிய ஒரு இடமென்றே அடிக்கடி விவரிக்கப்படுகிறது. வேதாகமம் உண்மையாகவே இவைகள் இரண்டும் எங்கேயிருக்கிறது என்று வெளிப்படுத்து கிறதில்லை ஆனால் இரு இடங்களும் நியாயத்தீர்ப்படையப் போகிற ஜனங்களுக் கென்றே ஆயத்தமாக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளபடி நரகமானது தண்டனைக்குரிய இடமாக இருக்கிறது. தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபிப்பவன் அல்லது வீணனென்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான் என்று கிறிஸ்து எச்சரிக்கிறார் (மத்.5:22). கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையும் சேர்க்கத் தம்முடைய தூதர்களை அனுப்பப்போவதைக் குறித்துப் பேசுகையில், கிறிஸ்து அவர்களைப் பற்றி, “அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்” (மத்.13:42) என்றார். யோவான், “அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்” (வெளி.21:8) என்றார். இது சரீர மரணம் உண்டென குறிப்பிடுகிறதாயிருக்கிறது மேலும் தேவனிடமிருந்து பிரிக்கின்றன எனக் குறிப்பிடுகின்ற வசனங்களைப் பற்றி அவர் தொடர்ந்து கூறுவது இரண்டாம் மரணத்தைப் பற்றியதாயிருக்கிறது. நரகத்தினுள் பங்குகொண்டிருத்தல் என்பது நித்திய தண்டனைக்குரிய ஒரு இடமாகும், அதன் பொருள் ஒருவன் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறான் மற்றும் அப்பேர்பட்ட மனிதனுக்கு வேறுநம்பிக்கையே இல்லை என்பதாகும்.

யோவான் ஸ்நானகன் கிறிஸ்துவின் வருகையைக் குறித்தும்

அவருடைய கிரியைகளைக் குறித்தும் விவரித்தபோது, அவன், "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்" (மத்.3:11,12). இங்கே கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பாரென்று குறிப்பிடுகிறது. நிச்சயமாகவே இதுவே அவர் தேற்றரவாளனை அல்லது பரிசுத்த ஆவியை அனுப்புவாரென தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு அவர் அளித்திருந்த அவருடைய வாக்குத்தத்திற்கு அடையாளமாக இருந்திருக்கிறது, மேலும் இதையே நாம் அவர்கள் பரிசுத்தஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டிருந்தார்கள் என வாசிக்கிறோம் (யோவா.16:13; அப்.2). ஆனால் கிறிஸ்து அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பார். இது துன்மார்க்கர் அக்கினிக் கடலில் பங்கடைவார்கள் என்பதற்கு ஆதாரமாக இருக்கிறது. பிறகு அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி தமது கோதுமையை அல்லது நீதிமான்களை களஞ்சியத்தில் சேர்ப்பார், பதரையோ அல்லது துன்மார்க்கரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் எனச்சொல்லி விவரிக்கிறான்.

துன்மார்க்கரைப் பற்றி வாசிக்கையில், நாம், "அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது" (வெளி.14:10,11) என வாசிக்கிறோம்.

இயேசு சொல்கிறார், "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" (மத்.10:28). மீண்டும் அவர், "சர்ப்பங்களே, விரியன்பாம்புக்குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வீர்கள்?" (மத்.23:33) என்றார். இயேசு இங்கே தம்முடைய நாட்களிலிருந்த மதவைராக்கியமுள்ள பரிசேயருக்கும் மாயக்காரருக்கும் சுட்டிக்காண்பிக்கிறார்.

எபிரெய ஆசிரியர் சொல்கிறார், "மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ்மிதித்து, தன்னைப்



அதிகாரத்திலிருந்து விடுவிக்கிறது; உறவுகளில் வாழ்வது தனிப்பட்ட சுதந்திரத்தையும் அனுமதிக்கிறது. ஒவ்வொரு தெரிந்தெடுத்தல் மற்றும் ஒவ்வொரு தீர்மானத்திற்கும் எனக்கு எதுவெல்லாம் சரியோ அது 'சரி'என்பதே அடிப்படை "தத்துவம்" என்பதாகயிருக்கிறது. **ஆனால் இவ்வுலக இன்பங்கள் என்னென்ன விளைவுகளைக் கொடுக்கிறது?**

❒ ஒரு நபர் அனைத்து உலக இன்பங்களுக்குக்கான கதவுகளை மனதார திறக்கிற பொழுது, சாத்தான் ஒரு உணர்ச்சி மிகுந்த நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் உலக இன்பங்களிலிருந்து வரும் விளைவுகள் என்ன? யார் மதுவிருந்திலிருந்தும், ஆல்கஹாலுடன் தன் உடல்நலத்தை அழிக்கிறதிலிருந்தும் விடுவித்துக்கொள்ள எச்சரிக்கையாயிருக்கிறான்? யார் ஆல்கஹாலிலும் மற்ற துர்ப்பழக்க வழக்கங்களினாலும் தன் குடும்ப போஜனத்தையும், வீட்டையும், துணிமணிகளையும் வீணாக்குகிறான்? யார் ஒருவித குடிபோதைமயக்கத் திலிருக்கும் போது தன் மனைவியையும் குழந்தைகளையும் அடிக்கிறான்?

யார் அளவுக்கு மிஞ்சிய மயக்கமருந்தினால் மரிக்கிறான்? எவள் அதிகமான போதை மருந்து மயக்கத்தினால் உலகத்தின் அசுத்தத்தில் வசிக்கிறபோது தன் குழந்தைகளை வீட்டில் தனியாக விட்டுவிட்டுச் செல்லுகிறாள் தன்னுடைய தாயின் உலகஇன்பமான போதைபழக்கத்தினால் யாருடைய குழந்தைகள் போதைப்பழக்கத்திற்கு அடிமையாக அல்லது கொடூரமான அங்ககீனமாக மற்றும் மூளை வளர்ச்சி குறைவாக பிறந்துள்ளனர்?

யார் பல வருடங்களாக புகைப்பிடித்தபின் மூச்சுவிடமுடியாதபடி நுரையீரல் நோயினால் அவதிப்படுகின்றனர்? யார் உணர்ச்சிமிக்க, நிதிசம்பந்தபட்ட, உதவியற்று மரிக்கிறவர்களாக, மருத்துவத்திற்காக எண்ணற்ற கிரயம் செலுத்தியும் ஒரு போதும் குணமாக்கமுடியாத நோயினாலும் அவதிபடுகிறான்?

யார் தான் கொண்டிருந்த அனைத்தையும் சூதாடி தொலைத்து தன்னுடைய வாழ்க்கை சாப்பாட்டிற்கும் வழியில்லாமல் போனதினால் தற்கொலை செய்கிறான்? மற்றவர்கள்போல் வெறுப்பு மற்றும் மனகசப்பு நிறைந்த இருதயத்தைக் கொண்டிருப்பதினால் உயர் இரத்த அழுத்தமும் சரீரப் பிரச்சனைகளையும் யார் அதிகரிக்கிறான்? யார் சகிப்புத்தன்மையற்ற மனநிலைகொண்டிருப்பதினால், குடும்பத்திற்காக, நேசிக்கப்பட்டவர்களுக்காக, நண்பர்களுக்காக, கூட்டாளிகளுக்காக வாழ்க்கையை நாசமாக்குகிறான்?

❒ ஒரு மனிதன் மனதில் எல்லா வேலிகளை நீக்குகிற பொழுது, மறுபடியும் சாத்தான் ஒரு மிகநல்ல காலத்தை வாக்குப் பண்ணுகிறான். ஆனால் ஒருவன் தான் விரும்புகிறதையெல்லாம் செய்கிறபோது, என்ன நடக்கிறது? அவன் 'விதிகளை மீறுவதில்' சந்தோஷமடையலாம், மேலும் அவன் தெரிந்கொள்ளுகிறதையெல்லாம் செய்வதில் சுதந்திரவாளியாக இருக்கின்றோம் என நினைக்கலாம், ஆனால் அவன் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவனாக மாறுகிறான். எல்லா விதிகளும் சிறந்த வாழ்க்கை, குறைந்த எதிர்ப்புதன்மை மற்றும் மனிதனுக்கிடையே குறைவான பிரச்சனைகளை உருவாக்கவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒருவன் விதிகளை

பெண்கள் பகுதி

## நான் உலகத்தின் "வேடிக்கை"யான காரியங்களை அநுபவிக்க விரும்புகிறேன்

### I Want To Enjoy 'Fun' Things Of The World

*-Betty*



ஒரு கட்டுப்பாடான வாழ்வை தெரிந்துகொண்ட, மற்றும் தன் நண்பர்கள் மீது அன்பு காட்டுகிற கிறிஸ்தவர்களை பார்க்கின்ற அநேகர் இதற்கு எதிரிடையான ஒரு உலகப்பிரகாரமான இன்ப வாழ்வோடு இசைந்தவர்களாய் **அவர்கள் குறைந்தபட்சம் தங்களுடைய இளமைப் பருவத்திலாவது உலகப்பிரகாரமான காரியங்களை அநுபவிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கின்றனர்.** தங்களுடைய நினைவுகளில், கிறிஸ்தவர்கள் சுய-வெறுப்பு மற்றும் சிலுவை-சுமத்தல் போன்ற வேதனை நிறைந்த காரியங்களில் ஒன்றான வாய்விட்டு சிரிப்பதற்கும் கட்டுபாடுள்ள ஒரு வாழ்வு வாழவேண்டியவர்களாக இருக்கின்றனர் என எண்ணுகின்றனர். யார் ஆனால் ஒரு மதியீனன் தாமாகவே உலகத்தின் எல்லா "நன்மை"யான காரியங்களை இழப்பானா?

**உலகம் கொடுக்கிறதான இன்பங்கள் எவையெவை?**

❒ **உலக இன்பம்.** ஒரு நபர் குடி, போதை, புகைபிடித்தல், சூதாடுதல், ஒழுக்கங்கெட்டசெயல், ஆபாசமான பாஷை, வெறுப்பு, மற்றும் சோதனைக்குரிய மற்ற நடத்தை போன்ற எந்த செயலையும் அனுமதிக்க விரும்புகிற இவைகளில் உலக இன்பத்திற்கு சுதந்திரம் உண்டு.

❒ **தவிர்ப்பதிலிருந்து சுதந்திரம்:** தவிர்ப்பதிலிருந்து சுதந்திரம் என்பது "விதிகளை" மீறும் ஒரு செயலாகும் அவன்/அவள் தன் இச்சைக்கேற்ப உடுத்திக்கொள்வது, தான் விரும்புகிற இடத்திற்குச் செல்வது, தான் தெரிந்தெடுக்கிற வாழ்க்கை முறையினை பின்பற்றுவது, மற்றவர்களுக்காக பொறுப்புள்ள தியாகம் செய்வதை தவிர்ப்பது ஆகும். இப்படிப்பட்ட சுதந்திரத்துடன், அங்கே பரஸ்பர உதவி, நீதி நெறி. ஒழுக்கம் அல்லது சமயக்கட்டுப்பாடுகள் போன்றவைகள் இல்லை. அங்கே இப்படிப்பட்ட காரியங்கள் 'பாவம்'போலவும், இதைச் செய்ய வேண்டும் அல்லது இதைச் செய்யக்கூடாது போன்ற மனசாட்சிக்குரிய அறிவுறுத்தல் போலவும் தோற்றமளிப்பதில்லை.

❒ **ஒரு நபருடைய சுய-நலன்களின் உயர்வு:** ஒரு நபருடைய சுய-நலன்களின் உயர்வு என்பது பொய், ஏமாற்று, அல்லது களவு போன்றவைகள். ஒருவர் பெற விரும்புகிறவற்றைக் கொண்டுவருமானால் இவைகளை அவன் செய்ய முடியும்; ஒருவனுடைய சுய சரீரத்தின்மேல் முழு அதிகாரம் செலுத்த கருச்சிதைவு அனுமதிக்கிறது, தீராத கொடிய வியாதியஸ்தரை மரிக்கவைத்தல் ஒருவனை தேவையிலுள்ளோர் அல்லது உதவியற்றோர் மேலுள்ள பொறுப்புகளின்



பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்" (எபி.10:28,29). பவுல், "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்... அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2தெச.1:7-9) என்கிறான். துன்மார்க்கனையும், நீதிமானையும் குறித்துப் பேசுகையில் கிறிஸ்து சொல்கிறார், "அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்" (மத்.25:46) மீண்டும் அவர், "ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்.8:12). பவுல், "பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ; நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்" (ரோம.6:23) என்றான். பிறகு யோவான், மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான், அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" (வெளி.20:10) என்றான்.

கிறிஸ்து ஐசுவரியவான் மற்றும் ஏழை மனிதனின் சம்பவத்தைக் கூறி, நாம் பரலோகம் மற்றும் நரகம் போன்றவற்றிற்குள்ள வேறுபாட்டினை நாம் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றியும் சொன்னார். நாம் வாசிக்கிறோம், "ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். லாசரு என்னும் பேர் கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந்த துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து, அடக்கம்பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ

பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய். அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான். அப்பொழுது அவன், அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்கிறேன் என்றான். ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான். அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான். அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள் என்று சொன்னான் என்றார்'' (லூக்.16:19-31). நரகம் உண்டென்பது உண்மை, ஆனபடியால் நாம் அங்கே போகாதிருக்க நாம் கண்டிப்பாக முன்னெச்சரிக்கையுடையவர்களாக இருக்கவேண்டும்.

ஒரு ஆத்துமா நரகத்திற்குள் தள்ளப்படும்போது, அது உடனே அங்கே நாசமடையும் அல்லது அழிந்துபோகும். இதுவே அதனுடைய முடிவு எனச் சொல்ல அநேகர் முயற்சிக்கின்றனர். நாம் பார்த்தபடி, எப்படியோ ஒருவன் நரகத்திற்குச் செல்லுகிறபோது அவன் நித்திய நித்தியமாக தண்டிக்கப்படுவான். மேலும் வாதிக்கப்படுவான். வேறு வார்த்தையில் பரலோகம் இருக்கும் காலமளவும் நரகமும் இருக்கும். அதாவது இரண்டும் நித்தியமானது. இப்போது நாம் வாசித்த வேதவாசிப்பிலிருந்து நாம் முடிவுரைக்கு வருவோம். பிசாசும் அவனுடைய தூதர்களும் நரகத்தில் இருப்பார்கள். துன்மார்க்கர், அவபக்தியுள்ளவர்கள், மாய்மாலக்காரர்கள், மதவிஷயத்தில் வஞ்சிக்கப்பட்டவர்கள், மாம்சத்திற்குரிய வேலைகளில் மூழ்கியிருப்பவர்கள், அவிசுவாசிகள், இன்னும் இதுபோன்ற பலவற்றிலிருக்கிற அனைவரும் நரகத்தில் தங்கள் பங்கை அடைவார்கள்.

எனது நண்பரே, நாம் எச்சரிக்கப்பட்டுள்ளோம், கிறிஸ்து அருளுகிற இரட்சிப்பைப் பற்றி அறிவுறுத்தப்பட்டுள்ளோம், மேலும் நரகத்திற்குச் செல்லாதவாறு நம்மைக் காத்துக்கொள்வதற்கு ஒவ்வொரு பிரயத்தனமும் நம்மைப் பரலோகத்திற்கு ஆயத்தப்படுத்தும்படி நம்முன் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவருக்குக்கீழ்ப்படியும்படி உன்னை பலவந்தம் பண்ணமாட்டார். தீர்மானம் உங்களுடையதாயிருக்கிறது. எங்களுடைய ஜெபம் கிறிஸ்து அருளுகிற இரட்சிப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதேயாகும். பவுல் சொல்கிறார், ''.....இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்'' (2கொரி.6:2) நாம்



இளைப்பாறுதலைப் பெற்றிருக்கும்படி கிறிஸ்து தம்மிடம் வரும்படி நம்மை அழைக்கிறார் (மத்.11:28-30). எபிரெய ஆசிரியர் நம்முடைய இரட்சிப்பை அசட்டை செய்யாதிருக்கும்படி நம்மை எச்சரிக்கிறார் (எபி.2:3).

நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? நீங்கள் பரலோகத்திற்குச் செல்ல ஆயத்தமாயிருக்கிறீர்களா? இல்லையென்றால், நீங்கள் இழந்துபோனவர்களாயிருக்கிறீர்கள் நரகம் உங்களுக்காக காத்திருக்கிறது. என்னுடைய நண்பா, தருணம் உள்ளபோதே கர்த்தருக்குச் செவிகொடு. அவரில் விசுவாசம் வைத்து, உன் பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, உன் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்றுக்கொள். அவ்வாறு செய்தால், கிறிஸ்து உன்னை இரட்சித்து தம்முடைய சபையில் உன்னைச் சேர்த்துக்கொள்வார் (மாற்.16:16; அப்.2:38,47). அதன்பின் நீங்கள் கர்த்தருக்காக வாழ்ந்து, அவரிடத்தில் கொண்டுள்ள விசுவாசத்தில் நிலைத்திருப்பீர்கள், ஒரு நாளில் பரலோகம் உங்களுடைய வீடாயிருக்கும். நீங்கள் என்னசெய்தாலும், தயவு செய்து நரகத்திற்குச் சென்றுவிடாதீர்கள்.

**ஜெபியுங்கள்**



- விடுமுறை நாட்களில் நடைபெறும் **VBS** வகுப்புகளுக்காக...
- புதிய ஊழியங்களுக்காக...
- சுவிசேஷபணியில் ஈடுபட்டுள்ள அனைத்து குடும்பங்களுக்காக...
- தேவனுடைய சித்தம் பூமியிலே ஒவ்வொருநாளும் நடைபெற...
- நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி நீங்க...
- நாட்டில் தேவனுடைய நாமம் மகிமைப்பட ஏதுவான ஆட்சி மலர...

## வேத அறிவுப்போட்டி: 164 -ன் விடைகள்

| | |
|---|---|
| 1. பவுல் | - 1தெச.3:10 |
| 2. தாவீது | - சங்.41:6 |
| 3. ஆக்கினைக்குள்ளாக்கப்படுவார்கள் | - 2தெச.2:11 |
| 4. உன் இருதயமாகிய பலகையில் | - நீதி.3:3 |
| 5. ஆம் | - 1தீமோ.2:5 |
| 6. வியர்த்தமாயிருக்கும் | - பிர.5:7 |
| 7. ஆம் | - 2தீமோ.6:4 |
| 8. குழி நரிகள், சிறு நரிகள் | - உன்.2:15 |
| 9. தீத்து | - தீத்து 2:1 |
| 10 சமாதானமும், என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம் | - ஏசா.32:17 |

### வேத அறிவுப்போட்டி:164-ல் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. கிரேஸ் ஸ்டெல்லா பக்தர் | - ஆதம்பாக்கம் |
| 2. S. தங்கம் | - கன்னியாகுமரி |
| 3. G. அந்தோனிதாஸ் | - பரமக்குடி |
| 4. Tmt. மரகதம்திரவியம் | - கோம்பை |
| 5. K. சிவப்பிரகாஷ் | - பரமத்தி வேலூர் |
| 6. S. தமிழ்செல்வன் | - பரமத்தி வேலூர் |
| 7. R. இம்மானுவேல் | - பரமத்தி வேலூர் |
| 8. V. அருனாசலம் | - பரமத்தி வேலூர் |
| 9. P. ரூத்பிரின்ஸ்ஸி | - பரமத்தி வேலூர் |
| 10. P. மார்த்தாள் | - பரமத்தி வேலூர் |
| 11. P. லீதியாள் | - கரூர் |
| 12. R. ஹரிகிருஷ்ணா | - பரமத்தி வேலூர் |
| 13. T. ராஜாத்தி | - கோம்பை |
| 14. D. சாந்தாதேவி | - தேனி |
| 15. A. வெற்றிவேந்தன் | - பரமத்தி வேலூர் |
| 16. T. ஏஞ்சலின் நேசமலர் | - மதுரை |
| 17. R. மங்களேஸ்வரி | - பரமத்தி வேலூர் |
| 18. G.P. ஏசையன் ராஜ் | - கோபி |
| 19. S. லதா | - தேனி |
| 20. G. பூங்கோதை | - ஈரோடு |
| 21. V. வீரராகவன் | - கரூர் |
| 22. D. டேவிட் | - சென்னை |
| 23. K. மோகன் | - குமாரபாளையம் |
| 24. R. எமிமாள் ரவிக்குமார் | - பாளையங்கோட்டை |
| 25. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 26. M. இராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 27. Mrs. கிப்ட் இளயராஜா | - ஒட்டநத்தம் |